செ.வெ.எண்: 02/ஜனவரி நாள்: 02.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**2016-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான தமிழக அரசின் விலையில்லா வேட்டி, சேலைகளை பயனாளிகளுக்கு மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் வழங்கினார்.**

இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம்காத்தான் ஊராட்சியில் மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் 2016-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான தமிழக அரசின் விலையில்லா வேட்டி, சேலைகளை பயனாளிகளுக்கு இன்று (02.01.2016) வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கிடும் வகையில் தமிழகத்தில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழகத்தில் விவசாயம், நெசவுத்தொழில், மீன்பிடி தொழில் போன்றவை முக்கிய தொழிலாக விளங்கி வருகிறது. இத்தொழில்களில் ஈடுபடுபவர்கள் பயன்பெறும் வகையில் பல திட்டங்களை ஏற்படுத்தி அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆண்டுதோறும் விலையில்லா வேட்டி, சேலைகளை சிறப்பாக வழங்கி வருகிறார்கள். 2016-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை 28.12.2015 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். இதன்படி 2016-ஆம் ஆண்டில் தமிழகத்தில் 1,68,04,986 சேலைகள் மற்றும் 1,67,89,404 வேட்டிகள் வழங்கப்படவுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 3 இலட்சத்து 2 ஆயிரத்து 826 வேட்டி, சேலைகள் வழங்கப்படவுள்ளது. இன்றைய தினம் பட்டிணம்காத்தான் ஊராட்சியில் 5 ஆயிரத்து 708 வேட்டி, சேலைகளும், ஏர்வாடியில் 2 ஆயிரத்து 647 வேட்டி, சேலைகளும் , தொடர்ந்து மாவட்டம் முழுவதும் சில தினங்களில் அனைத்து வேட்டி, சேலைகளும் வழங்கப்படவுள்ளது.

தமிழகத்தில் ஏழை, எளிய பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கவும், அவர்களுக்கு கல்வி கற்கும் ஆர்வத்தினை ஊக்குவித்திடும் விதமாக 10 மற்றும் 12-ஆம் வகுப்பு படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமண உதவித்தொகையாக ரூபாய் 25 ஆயிரத்துடன் விலையில்லாமல் 4 கிராம் தங்கம் மற்றும் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமண உதவித்தொகையாக ரூபாய் 50 ஆயிரத்துடன் விலையில்லாமல் 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டமும், பெண்கள் தங்களின் பொருளாதாரத்தை உயர்த்திடும் வகையில் விலையில்லா கறவை மாடு, வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், தாய் மற்றும் சேயினை நலமாக காத்திடும் வகையில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் மற்றும் அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம் வழங்கும் திட்டம், இல்லத்தரசிகளின் பணிச்சுமையைக் குறைத்திடும் விதமாக விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் என பெண்களுக்கு பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏற்படுத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

நெசவாளர்களுக்கு நெசவு செய்யும் வசதிக்கான இட அளவை கருத்தில் கொண்டு பொதுவாக ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் கட்டப்படும் பசுமை வீடானது நெசவாளர்களுக்காக ரூபாய் 2 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் பசுமை வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்து பசுமை வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகிறது. தமிழகத்தில் அனைத்து தர மக்களும் பாதுகாப்பாகவும், சிறப்பாகவும் வாழ்வதற்கு ஏற்ற சூழலை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். சுமார் ரூ.450 கோடி மதிப்புடைய வக்பு வாரிய சொத்துக்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கை மூலமாக மீட்டுத்தந்துள்ளார். உலமாக்களுக்கு ரூ.250-ஆக இருந்த உதவித்தொகையை ரூ.1000-ஆகவும் உயர்த்தியுள்ளார்கள். மேலும் அவர்களுக்கு சைக்கிள்

இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. வக்பு வாரிய நிர்வாகிகளுக்கு ரூ.3 கோடி நிலுவைத்தொகையை வழங்கியுள்ளர்கள். நோன்பிற்காக 3000 பள்ளிவாசல்களுக்கு 4500 மெ.டன் அரிசியை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

தொடர்ந்து மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் தமிழ்நாடு அரசின் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தின் கீழ், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஏர்வாடி ஊராட்சியில் 2,426 பயனாளிகளுக்கு ரூபாய் 95.97 இலட்சம் மதிப்பிலும், டி.மாரியூர் ஊராட்சியில் 765 பயனாளிகளுக்கு ரூபாய் 30.26 இலட்சம் மதிப்பிலும், நரிப்பையூர் ஊராட்சியில் 2,800 பயனாளிகளுக்கு ரூபாய் 110.76 இலட்சம் மதிப்பிலும், எஸ்.தரைக்குடி ஊராட்சியில் 1,322 பயனாளிகளுக்கு ரூபாய் 52.29 இலட்சம் மதிப்பிலும் ஆக மொத்தம் 7,313 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடியே 89 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு..ராம்பிரதீபன், சிறப்பு அமலாக்கத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.த.சௌந்தரராஜ், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா, முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.முருகன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.மு.சுந்தரபாண்டியன், ராம்கோ தலைவர் திரு.செ.முருகேசன், முதுகுளத்தூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர் திரு.இரா.தர்மர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.பி.ஜெயஜோதி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் (மண்டபம்) திருமதி.முனியம்மாள் முனியசாமி, (கடலாடி) திரு.வி.மூக்கையா, ஊராட்சி மன்றத் தலைவர்கள் திருமதி.எம்.சித்ராமருது, திரு.முகம்மது அலி ஜின்னா, கூட்டுறவு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**